## Slow Learner materials (Commerce 4 Marks Important Q & A)

**1.அமைப்பு:** பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான சிறப்பு வாய்ந்த பகுதியினை சரிக்கட்ட கூடியதொன்றாகும். **-லூயிஸ் எச். ஹேனே**

**2.ஒருங்கிணைத்தல்:** விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒரு பண்டகசாலை இலாபம் பெறவேண்டுமெனில் கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்

**3.தரவரிசை முறைக்கோட்பாடு:** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள் உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்

**4.வியாபாரஅமைப்பின் நோக்கங்கள்:** இலாப நோக்கு, சேவை நோக்கு, பேரளவு உற்பத்தியின் நன்மையை பெறுதல், குறிப்பிட்டகாலத்திற்கு முயற்சியை மேற்கொள்ளுதல், பணியாட்களிடம் இணக்கமான உறவுமுறை வளர்த்தல்.

**5.பன்னாட்டு நிறுமம்:** பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும். 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்.

**6.அயல் நாட்டு நிறுமம்: இந்தியாவுக்கு அப்பால் பதிவு செய்யப்பட்டு** ஆனால் இந்தியாவில்தொழிலிடம்உள்ள நிறுமம்ஆகும்.

**7.தனியாள் வணிகம்:** தனிநபரால் தனிநபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனியாள் வணிகம் என்று டாக்டர் ஓ.ஆர் கிருஷ்ணசாமி கூறுகிறார்.

**8.கர்த்தா:** இந்துக் கூட்டுக் குடும்பத் தலைமை உறுப்பினர் ஆவார்

**9.வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பு. வியாபார கடன்களை அடைக்க போதுமான சொத்துக்கள் தொழிலில் இல்லையெனில் **தனது சொந்த சொத்தை இழக்க நேரிடும்.** கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**10.வரையறு பொறுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமத்தில் ஒரு பங்குநர் தனது **பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும்** மதிப்பளவே பொறுப்பாகிறார்.

**11.வரையறுத்த கூட்டாண்மை:** ஒரு கூட்டாண்மையில் **கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தால்,**அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும். ஏதேனும் ஒரு கூட்டாளியின் பொறுப்பாவது வரையறாப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**12.கூட்டாண்மை:** 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு

**13.கூட்டாண்மை நிறுவனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை** குறைந்தபட்சம் 2 அதிகபட்சம் வங்கித்தொழில் 10, பிறதொழில் 20.

**14.கூட்டாளிகளிடையே நிலவும் உறவு முறை:** முதல்வர் மற்றும் முகவர் உறவு. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும் முகவர்களாகவும் செயல்படுகின்றனர்.

**15.கூட்டாண்மை ஒப்பாவணம்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே எழும் உடன்பாட்டின் காரணமாக உருவாக்கப்படுவதே கூட்டாண்மை. இந்தியாவில் கூட்டாண்மை உடன்பாடு வாய்மொழியாகவோ, எழுத்து வடிவிலோ இருக்கலாம்.

**16.இளவர் என்பவர் யார்? ஒரு இளவர் கூட்டாளியாக இருக்க முடியுமா?** 18 வயது நிறையாதவர் இளவர். சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது. அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் கூட்டாண்மையின் பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

**17.உழையாக் கூட்டாளி:**இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

**18.பெயரளவு கூட்டாளி :** இவர் தொழிலில் முதலிடுவதில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதில்லை. கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து உதவுகிறார். இவருக்கு இலாபத்தில் பங்கு இல்லை. வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார்.

**19. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு:** கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெறுவது - **கூட்டுப்பொறுப்பு** ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்தின்மீது வழக்கு தொடுத்து பெறுவது – **தனிப்பொறுப்பு**

**20.உட்கிடை ஆணையுரிமை: அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனை பாதுகாக்கும் பொருட்டு** சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமை. அக் கூட்டாளி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கூட்டாண்மையை கட்டுப்படுத்தும்.

**21.வெளிப்படை ஆணையுரிமை:** கூட்டாளிகளுக்கு **ஒரு உடன்பாட்டின்படி உரிமைகள் வழங்கப்பட்டிருப்பின்** அது வெளிப்படை ஆணையுரிமை. அவ்வாணையுரிமைக்குட்பட்டு அவர் மேற்கொள்ளும் அனைத்து செயல்களுக்கும் நிறுவனம் பொறுப்பாகும்.

| 22. கூட்டாண்மைக் கலைப்பு | கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு |
|---|---|
| **ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள்** கூட்டாண்மையோடு தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். | **அனைத்து கூட்டாளிகளும்** தங்களுக்குள்ள உறவை முறித்து கொள்வதாகும். |
| தொழில் **முடிவுக்குக் கொண்டு வரலாம்** அல்லது **தொடர்ந்து நடத்தலாம்**. | கட்டாயமாக **தொழிலை முடிவுக்கு கொண்டு வந்துவிடும்.** |

23. **அரசுத் தொழில்கள் இலக்கணம்:** உற்பத்தி,விவசாயம்,நிதி,வணிகம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம் - A.H. ஹேன்சன்

**24.அரசுத் தொழில்:** அரசுக்குச் சொந்தமாகவும், அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழில்கள் அரசுத் தொழில்கள் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக உள்ளாட்சி அல்லது மத்திய மாநில அரசுக்கு சொந்தமானதாக அதன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**25.அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்:** அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து மேலாண்மை செய்யலாம். ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் வணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி செயல்படுத்தலாம்.

**26.அரசு நிறுமம்:** ஒரு நிறுமத்தின் செலுத்தப்பட்ட **பங்கு முதலில் 51% மேல்** மைய அரசோ அல்லது மாநில அரசோ வைத்திருப்பது.அரசு நிறுமம் ஆகும். எ.கா பெல், செய்ல், மாருதி உத்யோக் போன்றவை

**27.துறைமுறை அமைப்பு:** இது அரசின் ஒரு பகுதியாக செயல்படுகிறது. அந்தந்த அமைச்சகத்தின் நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இது பொதுத்துறை அமைபபில் மிகவும் பழைமையானதாகும் (எ.கா) இரயில்போக்குவரத்து, தொலைபேசி, அணுசக்தி, அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்ச்சி.

**28.பொதுக்கூட்டுரு:** பாராளுமன்றத்தில் தனிசச்டட்த்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பு ஆகும். தனிச்சட்டத்திலேயே இதன் நோக்கம் அதிகாரங்கள் பணிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். இது ஒரு சட்டமுறைக்கழகம் ஆகும். (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம், யூனிட்டிரஸ்டு ஆப் இந்தியா, இந்திய தொழில்நிதிக்கழகம்.

**29.வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. TWAD, TNEB, TNHB

**30.இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்தது** : நாட்டின் பாதுகாப்பு குறித்த ரகசியங்களை தனியார் எதிரி நாடுகளுக்குச் சொல்லிவிடலாம். நெருக்கடி ஏற்படும் போது அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் போகலாம் எனவே இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்தது

**31.கூட்டு உருவாக்கம் பெறாத அமைப்புகள்:** உரிமையும் நிர்வாகமும் **பிரிக்க முடியாமல் இருப்பது.** தனியாள்வணிகம், கூட்டாண்மை இந்துக் கூட்டுக் குடும்பம்

**32.கூட்டு உருவாக்கம் பெற்ற அமைப்புகள்:** உரிமையும் நிர்வாகமும் **பிரிக்க கூடியது.** கூட்டுப் பங்கு நிறுமம், கூட்டுறவு சங்கம்.

**33.நிறுமத்தின் பொது இலச்சினை:** நிறுமம் சட்டம் உருவாக்கிய நபர். எனவே பத்திர ஒப்பந்தத்தில் கையொப்பம் இட முடியாது. அதற்கென தனி முத்திரை உண்டு. அம் முத்திரையை ஆவணங்களில் பதிந்து விட்டால் நிறுமத்தின் கையொப்பமாக கருதப்படும். இதுவே நிறுமத்தின் பொது இலச்சினை ஆகும்.

**34.நிகழ்ச்சி நிரல்:** கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய **நடவடிக்கைகளின் வரிசையே** நிகழ்ச்சி நிரல் என்று கூறப்படுகிறது. கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி, நிறுமச் செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

**35.நிகழ்ச்சி குறிப்பேடு:** நிறுமமொன்றின் பல்வகையான கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் **எடுக்கப்பெற்ற முடிவுகளின் (தீர்மானங்களின்) உண்மையான, சரியான பதிவுகள்தான்** நிகழ்ச்சிக் குறிப்பு எனப்படுகிறது. சுருக்கமாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.

**36.கூட்டத்தில் குறைவெண் :** ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வருகைதர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் ஆகும்.

**37.சிறப்புத் தீர்மானம் :** சிறப்புப் பொருள் குறித்து நிறைவேற்றப்பட வேண்டியது. 4ல் 3 பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

**38.ஒப்புறுதியளித்தல்:** பேரளவு விடுப்புகள் ஒப்புறுதியளித்தல் முறையிலேயே வெளியிடப்படுகின்றன. இந்த முறையில் ஒப்புறுதியர்கள் பொது மக்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்படும் என வாக்குறுதியளிக்கின்றனர். அவ்வாறு பொது மக்களால் எடுத்துக் கொள்ளப்படாத பங்குகள் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொள்கின்றனர்.

**39.பங்கு முனைமம்:** ஒரு நிறுமத்தின் பங்கொன்றின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும், குறைவாக உள்ள முகமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது. உ-ம் பங்கொன்றின் முகமதிப்புரூ10 எனவும் அதுரூ12க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குமுனைமம்ரூ2ஆகும்.

**40.பங்குகளை வட்டத்தில் வெளியீடுதல் :** பங்குகளை அவற்றின் முகமதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல் வட்டத்தில் வெளியிடுதல் ஆகும். உ-ம் பங்கொன்றின் முக மதிப்பு ரூ10 எனவும் அது ரூ 8 க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குவெளியீட்டு தள்ளுபடிரூ2 ஆகும்.

**41.ஒறுப்பிழைப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்** ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம். மறுவெளியீட்டில் வழங்கப்படும் தள்ளுபடி அப்பங்குகள் மீது முந்தையப் பங்குநரிடமிருந்து பெறப்பட்ட தொகை மிஞ்சக்கூடாது.

**42.தகவலறிக்கை:** ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்புவிடும் விளம்பரத்திற்கு பெயர் தகவலறிக்கையாகும்.

**43.மீள்தகு முன்னுரிமைப் பங்குகள்** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருக்குமாயின் இவ்வகை பங்குகளை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குப்பின் வெளியீட்டு நிபந்தனைப்படி பணத்தை திரும்பக் கொடுத்து பங்குகளை மீட்டுக் கொள்ளலாம்.

**44.கடனீட்டுப் பத்திரங்கள்** ஒருகடனைஒப்புக்கொள்ளும் அல்லது கடனைஏற்படுத்தும் ஒருஆவணமே கடனீட்டுப் பத்திரமாகும்.

**45.குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில்:** பங்குகளை ஒதுக்கீடு செய்தல் கூடாது. விண்ணப்பத் தொகையைத் திருப்பி அளிக்க வேண்டும்.

**46.பொது விடுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமங்கள் பொதுவாகப் பயன்படுத்தும் முறை. பொதுமக்களுக்கு நேரடியாக பங்குகளைக் குறிப்பிட்ட தொகைக்கு விற்பனை செய்வதாகும்.

**47.பரஸ்பர நிதிகள் :** இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் ஒழுங்கு படுத்துதல் 1993 விதிகளின்படி, 'பரஸ்பர நிதி' என்பது "அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்" என வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.

**48.போல்ட்:** போல்ட்என்பது மும்பை பங்குச்சந்தையில் மாச்1995 முதல் நடைமுறையில்உள்ள வணிகச் செயல்பாடாகும்.

**49.பகராள் :** நிறுமக்கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**50.மாற்று இயக்குநர் :** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருக்குமாயின் இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளி மாநிலத்திற்கு சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**51.சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?** நிறுமச் சட்ட வாரியம் அல்லது இயக்குநரவை அல்லது வேண்டுகோள் விடுத்த பங்குதாரர்கள் சிறப்புப் கூட்டத்தைக் கூட்டலாம்.

**52.சட்டமுறை கூட்டம் :** 1.பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டமாகும். நிறுமத்தின் வாழ்க்காலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது. 2.உரிமம் பெற்று ஆறு மாதத்திற்குள் ஒரு மாதத்திற்கு பின்னர் இக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**53.சட்டமுறை அறிக்கை:** சட்டமுறை கூட்ட நாளுக்கு 21 நாட்களுக்கு முன்னர் சட்டமுறை அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும். சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்து பங்குநர்கள் விவாதிக்கலாம்.

**54.பட்டியலிடுதல் :** பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ஆகும். பொது நிறுமங்களுக்கு பட்டியலிடுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**55. இயக்குநர் நியமிக்கப்படும் முறைகள்:** 1) நிறுமச் செயல்முறைவிதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால் 2) நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள் 3) இயக்குநர் அவை நியமிக்கும் இயக்குநர்கள் 4) மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள் 5) மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்

**56.செபி:** இந்தியப் பங்கு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்க்காக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்.

**57.பத்திரம்:** ஒரு பத்திரம் என்பது ஒருவரின் உடைமை உரிமை அல்லது கடனீட்டு உரிமையை குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம் ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுபத்திரம்.

**58.பங்கு மாற்றகம் இலக்கணம்:** பங்கு மாற்றகம் என்பது வாங்கியவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஒரு இடமேயாகும் - வேரஷ்டின்

**59. ஆயத்தகொடுப்பு ஒப்பந்தம்:** வாங்குபவரும் விற்பவரும் பத்திரங்களை உண்மையாகவே பரிமாறிக்கொள்வர். இவற்றை அவ்விடத்திய பேரங்கள் என்பர்.

**60.கூட்டுறவுச்சங்கம்:** H.C. கால்வேர்ட் - உறுப்பினர்களின் பொருளாதார நலனை பெருக்கிக் கொள்வதற்ககாக மனிதன் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே ஆகும்.

**61.இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். இராபர்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாவார்.

**62.கூட்டுறவு பண்டகச்சாலை :** அதிகமாக கிராமபுறங்களில் காணப்படும். விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. மேலும் முற்றுப் பெற்ற பொருட்களை சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

**63.கூட்டுறவு சிறப்பங்காடி 4 (எ-டு) :** காமதேனு – சென்னை . சிந்தாமணி – திருச்சி & கோவை கற்பகம் – வேலூர் பொன்னி - சேலம் பாண்டியன் சிறப்பங்காடி- மதுரை

**64.ஒரு நபர் ஒரு வாக்கு:** கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

**65.நாட்டுடைமையாக்கம் :** ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை நாட்டுடைமையாக்கம் எனலாம்.

**66.ஆதரவுப் பங்காதயம் :** கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை அதன் உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவு பயன்படுத்திக்கொள்கிறாரோ அந்தஅடிப்படையில் மேலூதியமாகவழங்குகிறது.இதற்கு பகிர்வுநிதி என்றுபெயர்.

**67.காளை (தெஜிவாலா) :** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை ஊக வணிகர் ஆவர். இவர் எல்லாம் நன்மைக்காகவே என்ற மனப்பான்மை கொண்டவர்

**68.கரடி ஆல்லது மண்டிவாலா:** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**69.கலைமான்**: கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் **'முனைம வேட்டையாளர்'** என்றும் அழைக்கப்படுகிறார்.

**70.முடவாத்து:** தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.

| **71.விருப்பமுறிக்கூட்டாண்மை** | **72.குறிப்பிட்ட கூட்டாண்மை** | **73.இணைவினை கூட்டாண்மை** |
|---|---|---|
| விருப்ப முறிக் கூட்டாண்மை என்பது கூட்டாண்மையின் **காலத்தை குறிக்காமல்** வியாபாரத்தை நடத்தி வருதலே ஆகும். | இக்கூட்டாண்மை **குறிப்பிட்ட காலத்திற்வோ** அல்லது **ஒரு குறிப்பிட்ட வணிக செயலை செய்து முடிப்பதற்கோ** நிறுவப்பட்டதாகும். | இணைவினை என்பது **தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட** ஒரு கூட்டாண்மை ஆகும். இது குறிப்பிட்ட வணிக செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்க உருவாக்கப்படுவதாகும். |
| கூட்டாண்மையின் வாழ்வு கூடடாளிகளின் **விருபபத்தைப் பொறுத்து** நீட்டிக்கப்படும். | இக்கூட்டாண்மை குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அல்லது குறிப்பிட்ட வணிக செயல் முடிவுக்கு வந்து விடும். | (எ-கா) ஒரு கட்டிடம் கட்டுவதற்காக உருவாக்கப்பட்ட கூட்டாண்மை அக்கட்டிடம் கட்டிவுடன் முடிவுக்கு வந்து விடும் |